பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 06 2025 **SUNDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. தமிழகம் வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்காக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா சிறப்பாக பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

திரு மன்சுக் மாண்டவியாவின் பிறந்த நாளையொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் திரு மன்சுக் மாண்டவியா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் பிஜேபி நிர்வாகிகள் பங்கேற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பாகிஸ்தானின் 100 கிலோமீட்டர் வரை உள்ளே சென்று தீவிரவாத முகாம்களை நமது படையினர் துல்லியமாக தாக்கி அழித்ததாக அவர் கூறினார்.

அந்நாட்டில் செயல்பட்டு வந்த தீவிரவாத கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி வெளியிட்டுள்ள கருத்து தவறானது என்றும், வருத்தத்திற்குரியது என்றும் திரு அமித் ஷா கூறினார்.

இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான கட்டுரைப்போட்டி இணையதளம் வாயிலாக இன்று தொடங்கி வரும் 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதில் பங்கேற்க விரும்புவோர் **mygov** இணையதளத்தை பார்வையிட்டு இப்போட்டியில் பங்கேற்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, புதுதில்லியில் நடைபெறும் 78-ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்கும் இவர்களுக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், சமூக வலைதள ஆர்வலர்களுக்கான போட்டி ஒன்றையும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

சுதந்திரப்போராட்டம் தொடர்பான நினைவகங்களை பார்வையிட்டு அதுதொடர்பான காணொலியை பதிவேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வெற்றிபெறும் மூன்று பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சி குறித்த ஓவியப்போட்டி ஒன்றையும் மத்திய அரசு நடத்துகிறது.

இதுதொடர்பான விவரங்களை **mygov** இணையதளத்தில் பார்வையிட்டு அறிந்துகொள்ளலாம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

தமிழகம் வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் நடைபெற்ற அக்கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

திமுக-விற்கு மக்கள் ஆதரவு அதிகரித்துவருவதாக அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், திமுக-வுக்கு எதிரான அலை வீசுவதுபோல திசை திருப்ப சிலர் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதனை முறியடிக்க திமுக தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு விரைவாக நடத்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் விரோத போக்கினை திமுக கடைபிடித்து வருவதாக கூறினார்.

தேமுதிக-வுடன் சுமூகமான உறவு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக – தேமுதிக இடையேயான நல்லுறவை யாராலும் உடைத்திட முடியாது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<>>>>>

டாஸ்மாக் ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப இயலாது என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டாஸ்மாக் விவகாரத்தில் ஊழல் நடந்துள்ளது என்பது மக்களுக்கு தெரிந்துள்ளதாக கூறினார்.

நீதிமன்றமும் இதுதொடர்பான உத்தரவுகளை பிறப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முறைகேடு விவகாரத்தில் தவறு செய்தவர்கள் உரிய பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

<<<<<>>>>>

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 24 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பு இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

<<<<<>>>>>

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளதையொட்டி, நாடு முழுவதும் அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒருபகுதியாக கும்பகோணத்தில் தேசிய மாணவர் படையை சேர்ந்த 500 பேர் பங்கேற்ற யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

மூன்று ஆசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக மருத்துவர் கார்த்திகா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***Sound Byte – கார்த்திகா – 41 Sec.)***

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுககு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில அவர் இவ்வாறு கூறினார்.

***Sound Byte - செந்தாமரை கண்ணன் - 57 Sec.)***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வாரச்சந்தையில் பக்ரீத் பண்டிகையையொட்டி மூன்று கோடி ரூபாய்க்கு மேல் ஆடுகள் விற்பனை நடைபெற்றது.

------------------

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர்.

-------------

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் அதிகனமழை எச்சரிக்கை காரணமாக மூடப்பட்ட சுற்றுலா தளங்கள் இன்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் **Changwon**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

------------

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 90 கிலோ எடைப்பிரிவில் **Naman Tanwar** -ம், 75 கிலோ எடைப்பிரிவில **Deepak** -க்கும் தங்கப்பதக்கம் வென்றனர்.

------------

**Ulaanbaatar** ஓபன் மல்யுத்தப்போட்டியில் இந்தியாவின் **Aman Sehrawat** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார். உதித் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------

**European** கோப்பை பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களை வென்றது.

ரோமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் **‘Rakesh Kumar, Dhanna Ram Godara** ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் குழு பிரிவிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

---------------

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச நீச்சல் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

-----------------

அர்ஜென்டினாவின் **Rosario**–வில் நடைபெற்றுவரும் நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜுனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல் கணக்கில், **Uruguay**–வை வென்றது.

**<<<<<END>>>>>**